பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 11 2025 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வாக்கு வங்கி அரசியலுக்கு மட்டுமே எதிர்க்கட்சிகள் முக்கியத்துவம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

2. வந்தே மாதரம் வெற்றி முழக்க பாடல் இல்லந்தோறும் ஒலிக்கட்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பொதுக்கூட்டங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளுக்கான நெறிமுறைகளை வகுப்பது குறித்து, அனைத்துக்கட்சித் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது

4. தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 12 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 48 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

வாக்கு வங்கி அரசியலுக்கு மட்டுமே எதிர்க்கட்சிகள் முக்கியத்துவம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

பீகாரின் **Arariya** -வில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வளர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துவருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு ஊடுருவல்காரர்கள் தடையாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதில் தேசிய ஜனநாயக கூட்டணி உறுதியுடன் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதற்கிடையே, பீகார் சட்டப்பேரவைக்கு முதல் கட்டமாக தேர்தல் நடைபெற்ற **121** தொகுதிகளில் **61** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

சுயசார்பு இந்தியா இயக்கம் என்பது நம்நாட்டிற்கு மட்டுமின்றி உலகிற்கானது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் வங்கி மற்றும் பொருளாதாரம் தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பொருளாதார வலிமை, தொழில்நுட்பத் திறன், சமூக மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்றவற்றை அடிப்படையாக கொண்டு, சுயசார்பு இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை அடுத்த 22 ஆண்டுகளுக்குள் உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் இந்த இயக்கம் செயல்பட்டு வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<>>>>>

வந்தே மாதரம் வெற்றி முழக்க பாடல் இல்லந்தோறும் ஒலிக்கட்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வந்தே மாதரம் பாடலின் 150-ஆவது ஆண்டு விழாவை நாட்டு மக்கள் கொண்டாட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

நமது உள்ளங்களிலும் வந்தே மாதரம் பாடல் தேச பக்தியை ஒளிரச்செய்யட்டும் என்றும் டாக்டர் எல். முருகன் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழக அரசு அதிகாரிகள் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.

தமிழகத்திற்கு இம்மாதத்திற்கான 13 புள்ளி ஏழு எட்டு டிஎம்சி தண்ணீரை கர்நாடகா திறந்துவிடுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர்கள் இக்கூட்டத்தில் வலியுறுத்தினர்.

<<<<<<>>>>>

பொதுக்கூட்டங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளுக்கான நெறிமுறைகளை வகுப்பது குறித்து, அனைத்துக்கட்சித் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு ரகுபதி, திரு மா சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தக்

கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

விவசாயிகளுக்கு தேவையான உரம் முறையாக விநியோகம் செய்யப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மாநில வேளாண் துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் அறிவுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் இதுதொடர்பாக, அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

சில்லரை உர விற்பனை நிலையங்களில் உர இருப்பு மற்றும் விநியோகத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

திருவண்ணாமலை, திருவள்ளூர், காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் நெல் சாகுபடி அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், உரங்கள் தட்டுப்பாடின்றி உடனடியாக விநியோகம் செய்யப்பட வேண்டும் என்றும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் விவசாயிகள், நெசவாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கோவையில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக கூறினார்.

சட்டம் — ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படாததே இதற்கு காரணம் என்று அவர் தெரிவித்தார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

<<<<<<>>>>>>

தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 12 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் — 54 Sec. )***

<<<<<<>>>>>

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் உள்ள பிரசித்திப் பெற்ற ஜடேருத்திர சுவாமி கோயிலின் ஐப்பசி மாத தேர்த் திருவிழா இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(சவுண்ட் பைட் — மூர்த்தி - 42 செகண்ட்ஸ்)**

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவண்ணாமலை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று ஆய்வு செய்தார்.

------------------

சிவகங்கை மாவட்டத்தில் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம் அனைத்து வட்ட வழங்கல் அலுவலகத்திலும் வரும்

எட்டாம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி பொற்கொடி கூறியுள்ளார்.

----------------

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே போதைப்பொருளை கடத்திய ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

------------------

திருப்பத்தூர் மாவட்டம் ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சியில் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **48** ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**Carrara-**ல் இன்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **167** ரன் எடுத்தது.

அதிகபட்சமாக சுப்மன் கில் **46** ரன் எடுத்தார்.

**Nathan Ellis** மற்றும் **Adam Zampa** தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

**168** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஆஸ்திரேலியா **18** புள்ளி இரண்டு ஓவரில் **119** ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Mitchel Marsh 30** ரன் எடுத்தார்.

வாஷிங்டன் சுந்தர் **3** விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இந்தியா **2-1** என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

-------------------

உலக மகளிர் ஒருநாள் கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணியினருடன் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் கலந்துரையாடினார்.

-------------------

ஐசிசி-யின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்கார் விருதுக்கு மகளிர் பிரிவில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

------------

உலக ஜுனியர் ஹாக்கிக் கோப்பை நாடு முழுவதும் **20** நகரங்களில் பொதுமக்களின் பார்வைக்காக நாளை முதல் கொண்டு செல்லப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி, வரும் **28-**ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் **10-**ஆம் தேதிவரை சென்னை மற்றும் மதுரையில் நடைபெறவுள்ளது.

------------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற உலக **Heyball** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Amee Kamani** வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Rathika Seelan** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>**